**பிப்ரவரி – 06**

# TNPSC துளிகள்

- நெதர்லாந்தில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு டாடா ஸ்டீல் மாஸ்டர்ஸ் போட்டியில் கிராண்ட்மாஸ்டர் R. பிரக்ஞானந்தா உலக சாம்பியனான D. குகேஷைத் தோற்கடித்து பட்டத்தினை வென்றார்.
- அவாடா குழுமம் ஆனது, ஒடிசாவின் கோபால்பூரில் ஒரு நாளைக்கு 1,500 டன் உற்பத்தி திறன் கொண்ட இந்தியாவின் மிகப்பெரியப் பசுமை நுட்பம் சார்ந்த அம்மோனியா உற்பத்தி ஆலையினை உருவாக்க உள்ளது.
- கருடா ஏரோஸ்பேஸ் நிறுவனமானது ஆளில்லா விமானங்கள் தொழில்நுட்பத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில், ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் இந்தியாவின் முதல் 'ஆளில்லா விமான நகரினை' நிறுவுவதற்காக சுமார் 100 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளது.
- ஒரு புதிய தலைமுறை நுட்பத்திலான நிதித் துறை சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக காப்பீட்டுத் துறையில் அந்நிய முதலீட்டு வரம்பினை 74 சதவீதத்திலிருந்து 100% ஆக உயர்த்துவதற்கு 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முன்மொழியப்பட்டது.
- மத்தியப் பிரதேச மாநிலத்தின் ரேவா மாவட்டத்தில் இந்தியாவின் முதல் வெள்ளைப் புலிகளின் ஒரு இனப்பெருக்க மையத்தினை நிறுவுவதற்கு மத்திய உயிரியல் பூங்கா ஆணையம் (CZA) அங்கீகாரம் அளித்துள்ளது.
- ஜம்மு-காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹாவுக்கு மகாராஜா ஹரி சிங் விருது வழங்கப்பட்டுள்ளது.
- குழந்தைகளைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தச் செய்தல் / குழந்தைகளின் பாலியல் ரீதியிலான படங்களை உருவாக்கப் பயன்படுத்தப்படும் சில செயற்கை நுண்ணறிவு கருவிகளுக்கு எதிராக கடும் சட்டங்களை அறிமுகப்படுத்தும் முதல் நாடாக ஐக்கியப் பேரரசு மாற உள்ளது.
- இந்தியா-மாலத்தீவுகள் ஆகியவற்றுக்கு இடையிலான 'ஈகுவெரின்' எனப்படும் 13வது கூட்டு இராணுவப் பயிற்சியானது மாலத்தீவில் நடத்தப்படுகிறது.
- ஒரு சமூக ஊடகத் தளமான எக்ஸ் (X) நிறுவனம் விசா என்ற பண வழங்கீட்டு அட்டை நிறுவனத்துடன் இணைந்து X money என்ற எண்ணிம பணக்கோப்பு மற்றும் நிகரிணை / சக கட்டணச் சேவைகளை அறிமுகப் படுத்த உள்ளதாக அறிவித்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு பருவநிலை உச்சி மாநாடு 3.0

- தமிழ்நாடு பருவ நிலை உச்சி மாநாடு 3.0 ஆனது சென்னையில் நடைபெற்றது.
- இந்த முக்கிய நிகழ்வின் போது, சுற்றுச்சூழலுக்கு உகந்த உற்பத்தி பல்வேறு தொழில் நுட்பங்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் அவற்றின் மீதான சுற்றுச்சூழல் தாக்கத்தை குறைக்க ஊக்குவிக்கும் வகையில், தொழில்துறைகளின் தன்னார்வ மதிப்பீட்டிற்கான வலை தளத்தினை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.
- தொழில்துறைகளுக்கான வழங்கீட்டுச் சான்றிதழ் திட்டத்தினை அறிமுகப் படுத்தும் 'Lifestyle for Climate' என்ற ஆவணத்தினையும் அவர் வெளியிட்டார்.
- விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ராஜபாளையம் பகுதியில் கார்பன் மீது மிகை நீக்கம் செய்வதற்கான செயல் திட்டமும் இந்த நிகழ்வில் தொடங்கப்பட்டது.

- இது குறைவான கார்பன் உமிழ்வு சார்ந்த வளர்ச்சிக்கான ஒரு முன்மாதிரியாக இந்தப் பகுதியில் தொழில்துறையை முற்றிலும் மாற்றியமைப்பதற்கான ஒரு குறிப்பிட்டத் திட்டமாகும்.
- தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் சுற்றுச்சூழல் குழுமங்கள் நிறுவப் படும் என்றும் முதல்வர் அறிவித்தார்.
- இது பருவநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கம் குறித்து பள்ளி மாணவர்களுக்கு சிறு வயதிலிருந்தே கற்பிப்பதற்கான அரசின் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.




## கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கான வழிகாட்டுதல்கள்

- நீண்ட பயணங்களின் போது கால்நடைகள் விழித்திருக்கவும், சரக்குந்துகளில் அவை அமர்வதையோ /படுப்பதையோ தடுக்கவும் அவற்றின் கண்களில் மிளகாய்த் துகள்களை பூசும் நடைமுறையை நிறுத்துமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு இட்டுள்ளது.
- கால்நடைகளை ஏற்றிச் செல்பவர்கள் பின்பற்ற வேண்டிய மிகவும் விரிவான பல்வேறு வழிகாட்டுதல்களையும் இது வகுத்துள்ளது.
- கால்நடைகள் வழுக்கி விழுவதைத் தடுக்கும் வகையில் சாய்வு தளங்கள் மற்றும் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் வடிவமைக்கப்பட வேண்டும்.
- கால்நடைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் சரியான காற்றோட்டம் கொண்டதாக இருக்க வேண்டும் மற்றும் அதில் மித சூடான வெப்பநிலை இருப்பது உறுதி செய்யப் பட வேண்டும்.
- அவற்றின் பயணத்தின் போது கால்நடைகளுக்கு ஏதேனும் துன்பம் / காயம் / கடும் நோய்க்கான அறிகுறிகள் இருக்கிறதா என்பதை அவ்வப்போது சரி பார்க்க வேண்டும்.

- ஒரு விலங்கிலிருந்து மற்றொரு விலங்கிற்கு கடும் நோய்கள் பரவாமல் தடுப்பதற்காக கால்நடைகளை கொண்டு செல்வதற்கு முன் மோட்டார் வாகனங்களை நன்கு சுத்தம் செய்ய வேண்டும்.
- மேலும், விலங்குகளைக் கொண்டு செல்லக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட தூரம் மற்றும் கால அளவைச் சான்றளிக்கும் அங்கீகரிக்கப்பட்ட கால்நடை நலன் மருத்துவர்களால் வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ்களை இந்தப் போக்குவரத்து நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும்.



## பொற்பனைக்கோட்டை அகழ்வாராய்ச்சி 2025





- புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொற்பனைக் கோட்டை என்ற தளத்தில் நெசவு செய்வதற்கான கருவியாகப் பயன்படுத்தப்படும் ஒரு எலும்பு முனை மற்றும் ஒரு சிறிய உடைந்த தங்கத் துண்டு ஆகியவை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப் பட்டுள்ளன.
- குறிப்பிடத்தக்க வகையில், 2023 ஆம் ஆண்டில் அகழ்வாராய்ச்சியின் முதல் தொடரில் அந்த இடத்தில் மலர் வடிவமைப்பிலான ஒரு தங்கக் காதணியினைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்தனர்.
- இதுவரையில், சில்லு விளையாட்டுக் கருவிகள், கண்ணாடி மணிகள் மற்றும் வளையல்கள், சோப்புக்கல்/நுரைக்கல் மணிகள், படிக மணிகள், இரும்பு ஆணிகள், சுடுமண் சக்கரம், அஞ்சனக்கல்லால் ஆன தண்டு, செப்பு நாணயங்கள், தேய்க்கும் கல்

போன்ற 1,743 தொல்பொருட்கள் இந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

# தேசியச் செய்திகள்

## பாலினம் சார் திட்ட நிதி ஒதுக்கீடுகள் 2025-26





- மத்திய அரசின் மொத்த நிதி ஒதுக்கீட்டில், 2024-25 ஆம் நிதியாண்டில் 6.8 சதவீதமாக இருந்த பாலினம் சார் திட்ட நிதி ஒதுக்கீட்டின் பங்கு ஆனது 2025-26 ஆம் நிதியாண்டில் 8.86% ஆக அதிகரித்துள்ளது.
- 2025-26 ஆம் நிதியாண்டின் பாலினம் சார் திட்ட நிதி ஒதுக்கீட்டு (GBS) அறிக்கையில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் நலனுக்காக 4.49 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டு GBS ஒதுக்கீடானது, 2024-25 ஆம் நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட 3.27 லட்சம் கோடி ரூபாயை விட 37.25% அதிகமாகும்.
- பகுதி A திட்டங்கள் (100% பெண்கள் சார்ந்தத் திட்டங்கள்) 1,05,535.40 கோடி ரூபாய் (மொத்த GBS ஒதுக்கீட்டில் 23.50%) பெற்றது.
- பகுதி B திட்டங்கள் (பெண்களுக்கான 30-99% ஒதுக்கீடு உள்ள திட்டங்கள்) 3,26,672.00 கோடி ரூபாய் (மொத்த GBS ஒதுக்கீட்டில் 72.75%) பெற்றது.
- பகுதி C திட்டங்கள் (பெண்களுக்கான 30 சதவீதத்திற்கும் குறைவான ஒதுக்கீடு உள்ளவை) 16,821.28 கோடி ரூபாய் (மொத்த GBS ஒதுக்கீட்டில் 3.75%) பெற்றது.
- 2024-25 ஆம் நிதியாண்டில் 38 அமைச்சகங்கள் / துறைகள் மற்றும் 5 ஒன்றியப் பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டு மொத்தம் 49 அமைச்சகங்கள் / துறைகள் மற்றும் 5 ஒன்றியப் பிரதேசங்கள் ஒதுக்கீடுகளை அறிவித்துள்ளன.
- 2025-26 ஆம் நிதியாண்டிற்கான பாலினம் சார் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 30 சதவீதத்திற்கும் அதிகமான ஒதுக்கீடுகளை அறிவித்த முதல் 3 அமைச்சகங்கள் / துறைகளாவன:
    - பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் (81.79%),
    - ஊரக மேம்பாட்டுத் துறை (65.76%) மற்றும்
    - உணவு மற்றும் பொது விநியோகத் துறை (50.92%).
- பெண்களுக்கு 23% மட்டுமே வீடுகள் ஒதுக்கப் பட்டுள்ள நிலையில், பிரதான் மந்திரி

ஆவாஸ் யோஜனா–கிராமீன் (PMAY-G) திட்டத்தில் குறைவான அமலாக்கமே பதிவாகி உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## USAID அமைப்பின் நிலை 2025

- அதிபர் டொனால்ட் டிரம்பின் நிர்வாகம் ஆனது, வெளிநாடுகளில் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக என்று முக்கியப் பொறுப்புகளைக் கொண்டுள்ள அமெரிக்க நிறுவனத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்துள்ளது.
- அப்போதைய அதிபர் ஜான் F. கென்னடி அவர்கள் பனிப் போரின் போது USAID எனப் படும் அமெரிக்க சர்வதேச மேம்பாட்டு நிறுவனத்தை நிறுவினார்.
- காங்கிரஸ் ஆனது வெளிநாட்டு உதவிச் சட்டத்தை நிறைவேற்றியது என்ற நிலையில் கென்னடி 1961 ஆம் ஆண்டில் அந்த USAID அமைப்பினை ஒரு தன்னாட்சி நிறுவனமாக நிறுவினார்.
- சில நாடுகளுக்கு அமெரிக்காவினால் வழங்கப் படும் உதவி இன்னமும் ரஷ்ய மற்றும் சீன நாடுகளின் செல்வாக்கை எதிர்க்கின்றது என்று USAID அமைப்பின் ஆதரவாளர்கள் வாதிட்டனர்.
- பதவியேற்ற முதல் நாளில், டிரம்ப் வெளிநாட்டு உதவியை 90 நாட்களுக்கு நிறுத்தி உள்ளார்.





## இலங்கையில் பணவாட்டம்


- 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இலங்கையின் நுகர்வோர் விலைகள் 4.0 சதவீதம் குறைந்தன.
- இது 1960 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குப் பிறகு பதிவான மிகவும் அதிகப்படியான பணவாட்ட விகிதமாகும்.
- கொழும்பு நுகர்வோர் விலைக் குறியீட்டின்படி, ஜனவரி மாத பணவாட்டம் ஆனது

தொடர்ந்து பதிவான ஐந்தாவது மாத பணவாட்டமாகும்.

- ❖ பணவாட்டம் என்பது சரக்குகள் மற்றும் சேவைகளின் பொதுவான விலை மட்டத்தில் ஏற்படும் தொடர்ச்சியான சரிவு ஆகும்.
- ❖ இது வழங்கீடானது தேவையை மீறும் போது நிகழ்கிறது, இதனால் நுகர்வோருக்கானா செலவினம் குறைகிறது.
- ❖ அந்த நாட்டின் பொருளாதார நெருக்கடியின் உச்சத்தில் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பணவீக்கம் 69.8 சதவீதமாக உயர்ந்தது.
- ❖ 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து (IMF) 2.9 பில்லியன் டாலர் பிணைக் கடனைப் பெற்றது.




## ஃபென்டானைல் நெருக்கடி




- ❖ கனடாவில், மில்லியன் கணக்கான அளவில் தவணைகள் வழங்குவதற்கு உதவும் 8 கிலோ அளவிலான ஃபென்டானைலை வைத்திருந்ததாக இரண்டு நபர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.
- ❖ சூரத்தில் உள்ள இரண்டு நிறுவனங்கள் ஃபென்டானைல் மூல வேதிப்பொருட்களை

வைட்டமின் C என்று தவறாக பெயரிட்டு, அனுப்பியதாக அமெரிக்க அரசு வழக்குத் தொடர்ந்தது.

- ஃபென்டானைல் என்பது போதைப்பொருள் அடிமைப் பழக்கத்தினை ஏற்படுத்தும் ஒரு செயற்கை ஓபியாய்டு ஆகும்.
- இது ஹெராயினை விட தோராயமாக 50 மடங்கு மிக அதிக சக்தி வாய்ந்ததாகவும், மார்பினை விட 100 மடங்கு அதிக சக்தி வாய்ந்ததாகவும் கருதப்படுகிறது.
- 2019 ஆம் ஆண்டில், சீனாவானது ஃபெண்டானைலை கட்டுப்படுத்தப்பட்ட போதைப் பொருளாக வகைப்படுத்தியது பின்னர் அந்தப் பட்டியலில் சில இரசாயனங்களையும் சேர்த்தது.

# பொருளாதாரச் செய்திகள்

## சந்தை உள்கட்டமைப்பு நிறுவனங்களுக்கான புதிய வழிகாட்டுதல்கள்

- சந்தை உள்கட்டமைப்பு நிறுவனங்களின் (MIIs) சட்டப்பூர்வக் குழுக்களின் செயல் திறனை மதிப்பிடுவதற்கான சில பல வழிகாட்டுதல்களை இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) வெளியிட்டுள்ளது.
- இந்த வழிகாட்டுதல்களின் கீழ், MII நிறுவனங்கள் அவற்றின் செயல்திறன் மற்றும் அவற்றின் சட்டப்பூர்வக் குழுக்களின் செயல்பாட்டை மதிப்பிடுவதற்காக வேண்டி ஒரு தன்னாட்சியில் இயங்கச் செய்யும் ஒரு வெளிப்புற முகமையினை உடனே நியமிக்க வேண்டும் என்பதோடு இது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று நியமிக்கப்பட வேண்டும்.
- MII நிறுவனங்கள் ஆனது பங்குச் சந்தைகள், பரிவர்த்தனைத் தீர்வு நிறுவனங்கள் மற்றும் வைப்புத்தொகைகளை உள்ளடக்கியவையாகும்.
- முதல் மதிப்பீடு ஆனது 2024-2025 நிதியாண்டு சார்ந்த மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும், மேலும் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## பொன்தலை விசிறிவால் கதிர்க்குருவி


- பொதுவாக புல்வெளிகளில் காணப்படுகின்ற பொன்தலை விசிறிவால் கதிர்க்குருவி (சிஸ்டிகோலா எக்சிலிஸ்) ஆனது, சமீபத்தில் கேரளாவின் இடுக்கியில் உள்ள மதி

கெட்டான் சோலை தேசியப் பூங்காவில் தென்பட்டது.

- இந்தக் கண்டுபிடிப்பானது, நீண்ட இடைவெளிக்குப் பிறகு தென்மேற்குத் தொடர்ச்சி மலைகளில் முதன்முதலில் இந்தப் பறவை தென்படுவதைக் குறிக்கிறது.
- முன்னதாக, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் வடக்கு கேரளாவின் சில பகுதிகளில் இந்தப் பறவை தென்பட்டது.
- இந்தப் பறவையானது மிகப் பொதுவாக மலைத்தொடர்களில் உள்ள புல்வெளிகளில் காணப் படுகிறது.




## அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள A23a பனிப்பாறை




- உலகின் மிகப்பெரிய பனிப்பாறையான A23a அண்டார்டிகாவில் உள்ள ஃபில்ச்னர் பனிப்படலத்தில் இருந்து பிரிந்தது.

- இது அதன் பயணத்தில் மிகவும் சமீபத்தில் தெற்கு அட்லாண்டிக் கடலில் மிதக்கத் தொடங்கியது.
- சுமார் ஒரு டிரில்லியன் டன் எடை கொண்ட இது சுமார் 400 சதுர மைல்கள் அளவு பரப்பளவைக் கொண்டுள்ளது.
- 1986 ஆம் ஆண்டில் அண்டார்டிக் ஃபில்ச்னர் என்ற பனிப்படலத்தில் இருந்து பிரிக்கப் படுவதற்கு முன்பு, A23a ஆனது அண்டார்டிகாவின் வடமேற்கே கடல் தளத்தில் 37 ஆண்டுகளாக நிலைப்பெற்றிருந்தது.
- இந்தப் பனிப்பாறையானது தற்போது தெற்கு ஜார்ஜியா தீவிலிருந்து 300 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது மற்றும் இரண்டு முதல் நான்கு வாரங்களில் அந்தப் பகுதியை வந்து சேரும்.

# மாநிலச் செய்திகள்

## டீபோர் பீல் பறவைகள் கணக்கெடுப்பு 2025

- 2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வலசை போகும் மற்றும் உள்நாட்டுப் பறவைகளின் எண்ணிக்கையினை விட சமீபத்திய, 3வது வருடாந்திர டீபோர் பீல் குளிர்காலப் பறவைகள் (2025) கணக்கெடுப்பில் அதன் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.
- டீபோர் பீல் என்பது அசாம் மாநிலத்தில் உள்ள காம்ரூப் என்ற மாவட்டத்தில் உள்ள கௌஹாத்தியின் புறநகரில் அமைந்துள்ள ஒரு வற்றாத நன்னீர் ஏரியாகும்.
- இது 2002 ஆம் ஆண்டில் ராம்சர் தளமாகவும், 2004 ஆம் ஆண்டில் ஒரு முக்கியமானப் பறவை மற்றும் பல்லுயிர்ப் பெருக்க பகுதி (IBA) ஆகவும் அங்கீகரிக்கப்பட்டது.
- இது அசாமில் உள்ள ஒரே ராம்சர் தளமாகும்.




## My NREGA செயலி – பார்மெர், ராஜஸ்தான்

- 2020 ஆம் ஆண்டு பணித் தொகுதியைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரி சித்தார்த் பழனிச்சாமி, My NREGA செயலியை உருவாக்குவதற்கான முன்னெடுப்பினை மேற்கொண்டார்.
- இந்தச் செயலி MNREGA திட்டத்தின் பயனாளிகளாக உள்ள தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு கோரிக்கை செயல்முறையை எளிதாக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது அவர்கள் தங்கள் வீடுகளில் இருந்தே வேலைக்கு எளிதாக விண்ணப்பிக்க வழி


வகை செய்கிறது.

- முன்னதாக, தொழிலாளர்கள் வேலைவாய்ப்புக்காக வேண்டி படிவம் எண் 6 என்ற படிவத்தினைச் சமர்ப்பிக்க கிராமப் பஞ்சாயத்துகளுக்குச் செல்ல வேண்டியிருந்தது என்பதோடு இந்தச் செயல்முறை பெரும்பாலும் தொழிலாளர்களின் மதிப்புமிக்க நேரத்தையும் முயற்சியையும் வீணடித்தது.
- இந்தச் செயல்முறையானது பெரும்பாலும் விண்ணப்பங்கள் தவறவிடப்படுவதற்கும், கோரிக்கைகளின் திறமற்றக் கண்காணிப்பிற்கும் வழிவகுத்தது.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்


## K. அலமேலு - சாரணர் உறுப்பினர்




- மணப்பாறை அருகே உள்ள சிப்காட் வளாகத்தில் பாரத் சாரணர் மற்றும் வழிகாட்டி

மீதான 75வது வைர விழா மற்றும் கலைஞர் நூற்றாண்டு விழா நடைபெற்றது.

- நம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், தென்கிழக்கு ஆசிய மற்றும் மேற்கு ஆசிய நாடுகளிலிருந்தும் சுமார் 20,000க்கும் மேற்பட்ட சாரணர் மற்றும் வழிகாட்டிகள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.
- சென்னையில் வசிக்கும் 91 வயதான K. அலமேலு அவர்கள், இந்த நிகழ்வில் முக்கிய நபராகப் பங்கேற்றார்.
- சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில், நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் 12 சாரணச் சிறுவர்களின் பேரணித் திரள்களிலும், பல்வேறு மாநிலங்களில் நடைபெறும் ஏராளமான 'முகாம்களிலும்' அவர் கலந்து கொண்டுள்ளார்.
- ஹரியானாவில் இந்த இயக்கத்தின் வெள்ளி விழா, சென்னையில் நடைபெற்ற பொன் விழா மற்றும் திருச்சியில் நடைபெற்ற வைர விழா ஆகியவற்றில் அவர் கலந்து கொண்டார்.
- பாரத சாரணர் மற்றும் வழிகாட்டு இயக்கத்தின் தேசியத் தலைமை ஆணையரான K.K. காந்தேல்வால் இந்த இயக்கத்திற்கான அன்பில் மகேசின் பெரும் பங்களிப்பிற்காக மதிப்புமிகு வெள்ளி யானை விருதினை அவருக்கு அறிவித்தார்.
- இந்த விருது ஜனாதிபதி திரௌபதி அவர்களால் வழங்கப்படும்.
- சாரணர் இயக்கத்தின் நிறுவனர் ராபர்ட் பேடன் பவுல் அவர்களின் வம்சாவளியினரும் கில்வெல் என்பதின் ஐந்தாவது புரவலருமான டேவிட் பேடன் பவுல் என்பவரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்
- ஜாம்போரி குழுவானது தமிழ்நாடு ஆளுநர் RN ரவி அவர்களை சிறப்புத் தலைமைப் புரவலராகவும் தமிழ்நாடு முதலமைச்சர் MK ஸ்டாலினைத் தலைமைப் புரவலராகவும் மற்றும் ஜாம்போரி மன்றத்தின் புரவலராக துணை முதல்வரையும் கொண்டதாகும்.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★